



ஓலை 68 | ஓசை 188 | ஏப்ரல் 2024

# அகர முதல இலக்கியப் பேரவை



## கவிதை வார இதழ்

தமிழ்ப்பணியில்...

அகர முதல இலக்கியப் பேரவை [ ம ] சிவம் அறக்கட்டளை

# திருக்குறள்

## குறள்

**அகன்அமர்ந் தீதலின் நன்றே முகனமர்ந்து**
**இன்சொலன் ஆகப் பெறின்**

## பொருள்

**முகத்தால் விரும்பி, இனிய சொற்களைக் கூறுகிறவனாக ஆகிவிட்டால், உள்ளம் மகிழ்ந்து பொருளைக் கொடுப்பதைக் காட்டிலும் அது நல்லது**

அகர முதல இலக்கியப் பேரவையில் இணைய
9597887847

அகர முதல இலக்கிய பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

## நிர்வாகக் குழு

**கு.செல்வமுத்துகுமரன்**

## ஆசிரியர்கள்

**அ.வில்சன்**
**குமர.தர்மசீலன்**

## வடிவமைப்பு

**ச.சூர்யா & அ.வில்சன்**

## அலுவலக முகவரி


**97, குஞ்சிதபாதம் நகர், டவுன்ஸ்டேஷன் தென்புறம்,
மயிலாடுதுறை-609001.**


# அகர முதல இலக்கியப் பேரவை

# இழிவிலும் இழப்பிலும் வருவதே பட்டறிவு

பா வகை எண்: அளவடிச் சமநிலைச் சிந்து

பள்ளி சொல்லா பாடம் சொல்லும் - வாழ்வும்
பட்டே தெளியென பகடை உருட்டும்
அள்ளித் தருமே அலையாய் இழப்பும் - இங்கே
அடுத்தவர் முகத்திரை அவிழ்க்கும் இடரும்

கற்ற கல்வி கண்கள் மூடும் - பட்டறிவு
கண்ட பின்னே கண்ணீர் ஓயும்
பெற்ற யாவும் பீடாய் நின்றே - நாம்செய்த
பிழைகள் சொல்லும் பிளவை வெல்லும்

வலிகள் தானே வழிகள் அமைக்கும் - என்றும்
வாழ்க்கை நடத்தும் வகுப்பும் வேண்டும்
எலியை புலியாய் எளிதாய் மாற்றும் - பட்டறிவே
எழுச்சி ஊட்டி ஏற்றம் கொடுக்கும்



தீயதும் கூட தீங்கில்லை அறிக - புதிதாய்
திறக்கும் கதவே திசைகள் முடங்க
காயம் கண்ட காயம் தானே - அடுத்தமுறை
கருத்தாய் இருக்கும் காயம் தவிர்க்க

பட்டறிவின் விலையோ பங்குச் சந்தை - போல
பணியும் எகிறும் பாங்காய் மெள்ள
சுட்ட இழிவைச் சூடும் வடுக்கள் - நாளை
சூழ்கொண்டே உரைக்கும் சுவைத்த பாடம்

கவிஞர் பூர்ணிமா சங்கர், கோயம்புத்தூர்

# இயற்கை

பா வகை : கட்டளை கலித்துறை

நேராய் கிடையாய் நிலையாய் மலையென நிற்பவளே!
காராய் கடலாய் காற்றாய்ச் சுழலும் கருமையளே!
நீராய் வளைவாய் நிலத்தின் வளமாய் நதி மகளே!
பாரில் உயிர்கள் பலவின் வாழ்வாய்ப் படர் பவளே!

காடாய்த் திருவாய் கனியின் தருவே கவினழகே!
பாடாய்ப் படுத்தும் பசிப்பிணி நீக்கும் பசுமையளே!
மேடாய் மரமாய் மழைநீர் சொறிய முனைபவளே!
தேடா மருந்துகள் தேக்கி நிறைந்தாய் துணைமனையே!

ஓடும் முகிலாய் ஒளிரும் நிலவாய் உயர்ந்தவளே !
தேடும் மலரில் திகட்டாத் தேன்தரும் தீஞ்சுவையே!
பாடும் குயிலாய்ப் பறந்திடும் வண்டில் பரந்தவளே!
ஆடும் மயிலாய் அழகுப் புவியெனும் ஆரணங்கே !

உனையே அழித்து உலகினை மாற்றும் உயர்வெல்லாம்,
எனையே அழிக்கும் எனவே அறிந்தேன் எழில்மகளே!
வனமே, புனலே, விசும்பே வளியே விரிசுடரே!
தினமே திருந்தி தொழுவேன் இயற்கைத் தேவதையே!



கவிஞர் திருமதி. இரா. இராஜாமணி, ஈரோடு

# ரமலான் லிமரைக்கூக்கள்

ரமலான் புனித நோன்பு
தூய்மையோர் ஆக கடமை ஆக்கப்பட்டுள்ள
முஸ்லிம்களின் அற்புத மாண்பு

அருள்நிறை ரமலான் மாதம்
அல்லாவை அதிகம் நெருங்க வாய்ப்பளித்து
இச்சைகள் துறந்திடும் ஆகம்

நோன்பு எனும் வணக்கம்
பசியோடும், தாகத்தோடும் இருப்பது மட்டுமல்ல
இறையச்சம் ஏற்படுத்தும் இணக்கம்

நோன்பில் ஓய்வெடுக்கும் குடல்
பலவித நோய்களில் இருந்து தப்பித்து
புத்துணர்வு பெறும் உடல்

திறக்கப் படும் சொர்க்கம்
இறைவனை சந்திக்கையில் எழும் மகிழ்ச்சியில்
அடைபடும் சைத்தான்களின் நரகம்

கவிஞர் ராஜ் ஆரோக்கியசாமி, பிச்சாண்டார் கோவில்

# மனம்

தனிஊசலாய் அலைந்து திரியும்
அதிசயக் குதிரை.
தென்றலிலே இனிமை.
சிந்தையிலே வெறுமை.
அன்பினிலோ ஏழ்மை.
குரங்கின தன்மை உமக்கு.
என்றாலும்
யாழின் இசையும்
தோழமையின் தோள்களும்
உனது கரங்கள்.



கவிஞர் ப. தனலட்சுமி, ஈரோடு

# மனிதம் மலரட்டும்

எவ்வுயிரையும் தன்னுயிராய்
என்றும் காண்போம்.

யாதும் ஊரே
யாவரும் கேளிர்

என்று பூங்குன்றனார்
அன்றே சொன்னார்.

ஏழையின் சிரிப்பில்
இறை காட்சி.

நிலையாமை நிலைத்த
நில்லாத உலகிது.

பிறந்தோர் அனைவரும்
இறக்கவே போகிறோம்.



இருக்கும் வரையில்
இரக்கமாய் இருப்போம்.

அன்பே சிவமாம்
அனைவரும் அறிவோம்.

பசியோடு வருவோர்க்குப்
புசிக்க உணவு.

பகிர்ந்தே தருவோம்.
பார்த்தே மகிழ்வோம்.

வாடிய பயிரின்
வாட்டத்தைக் கண்ட

வள்ளலார் வருந்தி
வாட்டம் அகற்றியே

வருவோர்க்கு உணவு
வாகாய் நல்கியே

சித்தராய் இருந்தே
சித்தம் தெளிவித்தார்.

சாதியைச் சாய்ப்போம்.
சகோதரத்துவம் பேணுவோம்.

இறந்தும் வாழ்ந்திட
இரக்கத்தோடு உதவுவோம்.

மனிதநேயம் மலர்ந்திட
மனமிருந்தால் போதும்.

*கவிஞர் செ. கலைவாணி, மேட்டூர்அணை*

ஒரு பருக்கைச் சோறு
எறும்புக்கு
எட்டு வேளைத் தீனி.
உன்-
ஒரு வேளைச் சோறு
யானைக்கு
ஒரு வாய்க் கவளம்.
/
ஓடிக்கொண்டிருக்கும்
நதியில்,
ஆசையாசையாய்
நானொரு
நதி வரைகிறேன்.
நான் வரைந்த
நதியையும் மறுப்பின்றி
தழுவிக் கொண்டோடுகிறது
தாய்நதியாய்
அந்நதி.



தாமதமாக வந்து
விரைவில்
வெளுத்துப் போன
மீசையில்
நரைத்த கம்பி
ஒவ்வொன்றையும்
தேடிப்பிடித்து
வெட்டுகிறேன்
முதுமையை மறைத்து
என்னிளமையை
நிரூபிக்க.

கவிஞர் பாரியன்பன் நாகராஜன், குடியாத்தம்

# ஜாதகப் பொருத்தம்

பன்னிரெண்டு ராசிகளில்
கட்டம் கட்டி
நவக்கிரக நாயகர்களை
நிற்க வைத்து
பத்து பொருத்தம் பார்த்து
இல்வாழ்க்கையில் இணைத்து
இன்பமாய் வாழ சொன்னால்
எதிரும் புதிருமாய் நின்று
ஏட்டிக்குப் போட்டியாக
வாய் வார்த்தையாடி
வாழ்கையைத் தொலைத்துவிட்டு
நீதிமன்ற வாசலிலே கால்கடுக்க
காத்திருந்து மணமுறிவு வாங்கியப்பின்
ஜாதகப் பொருத்தமில்லை என்று
பழிபோட்டு தப்பித்துக் கொள்ள
பொருந்தாதது ஜாதகம் மட்டுமல்ல
மனங்களும் தான்!




கவிஞர் லதா சுப்ரமணியன், சென்னை 119

# குற்றால மலை

உயர்ந்தோங்கிய மலையில்
உய்வான அருவி
உள்ளம் கொள்ளையாகுதே
ஊருக்குள் தெரிவி

வானளவு மரங்களிலே
இனிப்பான கனிகள்
வாய்ப்பாக தொங்குதே
இக்காடெங்கும் பெருகி.



வானரத்தின் துணைவிக்கு
வழங்கும் பழமும்
வாயிலிருந்து சிந்தியே
வழிந்திடுமே தேனாய்.

தேவர்களின் வரவினிலே
கண்ணசைப்பர் வேடருமே
தேவாமிர்தம் இங்கில்லை
கலைத்திடுவர் பாடருமே.

குற்றால நாதரிடம்
குறைகளின்றி வாழவே
குன்றின் மீதே
வந்திறங்குவர் சித்தர்களே.

இயற்கையின் அன்னையின்
இன்முகமும் சிறப்பாமே
எடுத்தியம்ப முயன்றதே
என்றுமே குறவஞ்சியன்றோ!

கவிஞர் இராஜகை நிலவன், மும்பை

# நெஞ்சம் நிறைந்த நிறைமதியே



வெண்ணிற மேனியிலே
பன்னீர்த் துளிகளே
வெண்சாமரம் வீசிடும்
இமைகளால் ஈர்த்தவளே

கன்னக் குழிதனில்
காதலைப் புதைத்தேனே
உதட்டசைவில் உள்ளத்தின்
உணர்வுகளை அறிந்தேனே

இளமையின் எழிலே
வாலிபத்தின் பொலிவே
தித்திக்கும் வார்த்தைகளில்
வசமானேன் உன்னிடமே

வசியம் செய்திட்ட
வஞ்சியும் நீதானே
கொஞ்சும் கிளியே
கோபுரத்தின் கலசமே

அன்னத்தின் நடையால்
ஆடுதடி உன்னழகே
தென்றலது தழுவிட
தேகமெங்கும் சிலிர்த்திடுதே

கன்னியே கவர்ந்திழுத்த
கார்குழல் காரிகையே
இணைந்திட்டாய் என்னுடனே
இதயத்தில் நுழைந்திட்டாயே

மயங்குகிறேன் நித்தமும்
உனதன்பு முத்தத்தாலே
வஞ்சமில்லாப் பாவையே
வாசமுள்ள முல்லையே

மானின் துள்ளலை
மங்கையிடம் காண்கிறேனே
சொந்தமே நெஞ்சம்
நிறைந்த நிறைமதியே.

கவிஞர் பெ. வெங்கட லட்சுமி காந்தன், விருதுநகர்

# திருவடி

வறுமை வெல்லும் திறனருளி
வெறுமை நீக்கி வளமை தரும்
வயலூர் நாதன் திருவடி.

இன்னல் இருள் விலகி
இன்னொளி எழும் நாளில்
பதர்கள் வீழ்ந்து போகும்.

நாவில் உதிரும் சொல்லும்
நினைவில் அரும்பும் எழுத்தும்
நெடுவேள் புகழ் பாடும்.

மனதின் இருளை அகற்றும்
வண்டமிழ் வையவன் திருவடி.



கவிஞர் செ. தமிழ்நேயன், தமிழ் நாடு

யாருடனும்
பேச இயலாத நிலையில்
அலைபேசியை
எடுத்து அமர்கிறேன்
விரலுக்கு விரல்
ஏதோ ஒரு செயலி
பேசிக்கொண்டியிருக்கிறது

*

புத்தனின் மௌனத்திற்கு
கவிதை கொடுத்தேன்
அவனைப் போல்
மாறிவிட ஆசையை தந்து சென்றான்
புத்தன்

*

நிலவினை சுற்றிய
இருளுக்கு
ஒரே ஒரு நாள்
பத்து விரல் முளைத்துவிடுகிறது
கும்மிருட்டிக்குள் இனிப்பு வழங்கி
அமாவாசையென பெயரிட்டேன்



ஐந்து விரல்களின் ஏற்ற தாழ்வு பற்றி
பேசினார் அப்பா
அப்போது விழுந்தது
ஒன்றாக எடுத்த ஒற்றுமையான
குடும்ப புகைப்படம்

*

சிறகினை மடக்கி
பதுங்கிவிடும் பறவைக் கெல்லாம்
பசிக்காக வயிற்றை சுருக்கும்
அம்மையின் சாயல்

கவிஞர் சே. கார்கவி கார்த்திக்

# வெற்றிக்கான மந்திரம்

வீரமாகப் பேசுவதில்லை வெற்றி
விவேகத்துடனான செயல்திறனும்,
அறிவுப்பூர்வமான செயல்பாடுமே
வெற்றிக்கு வழி

வாழ்வின் உயர்வுக்கான
உந்து சக்தி
எப்போதும் இருக்கிறது நம்மிடமே

தளராத மனமும், தன்னம்பிக்கையும்
இருந்துவிட்டால்
எந்தத் தடையையும் உந்தித் தள்ளலாம்



தெளிவான தேடல் இருந்துவிட்டால்
முயற்சிகளில் அயற்சி இருக்காது
ஒரு நாளும்

வெற்றிக்கு பணம் பிரதானமல்ல
நேர்மையை கைவிடாத
மனமே பிரதானம்

நேர்மறை சிந்தனையை முன் வைத்து
நாளும் செயல்பட்டால்
நிச்சயம் ஏற்றலாம் வெற்றிக் கொடி

எந்த இடத்தில் இருக்கிறோம்
என்பது முக்கியமல்ல
எந்தத் திசையில் நிற்கிறோம்
என்பதே வெற்றிக்கான சூத்திரம்

*கவிஞர் ஸ்ரீநிவாஸ் பிரபு*

# கல்லூரி நட்பு

கருவறை நம்மைக்
மழலையாக்கியது
வகுப்பறை தானே
நம்மை மனிதனாக்கியது
எங்கோ பிறந்து
எங்கோ வளர்ந்தோம்
ஆனாலும் என்றும்
நாமெல்லாம்.
ஒரு கல்லூரித் தாயின்
பிள்ளையாக வளர்ந்தோம்.
அன்றும் இன்றும் என்றும்
நாம் நட்பின்
பயணம் தொடரும்.



கவிஞர் ஸ்ரீவள்ளி, கோவை

# உடல் நலமே உலக நலம்

உடல் நலத்தை நன்றாக பேணிடு
ஆரோக்கிய உணவை தினமும் உண்டிடு
நடை பயிற்சியை தினமும் செய்திடு
தண்ணீரை தேவைக்கேற்ப தினமும் எடுத்திடு
அடிக்கடி மருத்துவரை பார்க்க சென்றிடு
வீட்டிலுள்ள அஞ்சறைப் பெட்டியை கவனித்திடு
சுத்தத்தை எப்போதும் பேணிக் காத்திடு
நல்ல பழக்கத்தை கடைப் பிடித்திடு
நல்ல நண்பர்களை சேர்த்து வைத்திடு
காய்கறிகளை தினமும் உணவில் சேர்த்திடு
தேவையில்லாமல் வெயிலில் சுற்றுவதை தவிர்த்திடு
நல்ல இசையை நாளும் கேட்டிடு
நோயில்லாமல் நீண்ட நாள் வாழ்ந்திடு
உணவே மருந்து என்பதை உணர்ந்திடு
யோகப் பயிற்சியை செயல் படுத்திடு
சிரித்த முகத்தோடு வாழ்ந்துக் காட்டிடு



கவிஞர் ம. செ. அ. பாமிலா பேகம், நாகர்கோவில்

# மணிமேகலை (எட்டு)

7. துயில் எழுப்பிய காதை

1. மணிமேகலையை மறப்பாயாக :

காதல் மயக்கத்தில் கட்டுண்டு கிடந்தான் உதயகுமரன்
ஆதலால் மணிமேகலையை அடைந்து விடலாம், கனவு
சோதனையாக கண் விழித்துப் பார்த்தான் அவள் இல்லை
வேதனையோடு அவளைத் தேட, மணிமேகலா தெய்வம்

முன்னே நிற்கும் மணிமேகலா தெய்வத்தைக் கண்டான்
"தன்னிறைவு, வீரம், புகழ் செறிந்த சோழ இளவரசனே
உன்னையே நீ நினைத்துப் பார், மக்களின் நலன் கவனி
தன்னலம் கருதாது வாழப் பழகு அவளை நீ மறப்பாயாக"

செங்கோல் கோடினால் கோள்கள் நிலை குலையாதா?
தங்க மகனே, நாட்டில் மழை பெய்யாது வளம் கெடும்
எங்கும் பஞ்சமும் பட்டினியும் மக்கள் அவதியுறலாமா ?
சிங்க வீரனே அதனால் மணிமேகலை மோகத்தை விடு


2. மணிமேகலா தெய்வம் :

உவவனத்தில் உறங்கும் சுதமதி கண் விழித்துப் பார்த்தாள்
புவனம் போற்றும் மணிமேகலா தெய்வம் புன்னகையுடன்
தவசியாக வாழவேண்டிய உன் தோழி இப்போது இங்கில்லை
அவளை பத்திரமா மணிபல்லவத் தீவில் வைத்திருக்கிறேன்



முற்பிறவியை அறிந்து, ஏழாம் நாள் அவள் இங்கு வருவாள்
குற்றமற்ற கோவலன் என்னை அறிவான் அதன் காரணமே
பெற்ற மகளுக்கு மணிமேகலை எனப் பெயரிட்டான், உணர்க
உற்ற தாய் மாதவியிடம் இதைக் கூறு அவள் புரிந்துகொள்வாள்
சுற்றம் அறியாமல் அந்த அரிய தெய்வம் வானில் மறைந்தது

கருமை பூசப்பட்டதுபோல் சுதமதி மனம் இருண்டு கிடந்தது
அருமை மணிமேகலையைப் பிரிந்து வதங்கிய கொடியானாள்
பெருமை மிகுந்த சக்கரவாளக் கோட்டத்தை அடைந்தாள்
அருகாமையில் ஒரு நெடுந்தூண் தேவதச்சன் மாயன் கட்டியது



3. அற்புத பாவை

அதில் இருந்த அற்புதப் பாவை முற்பிறவி செய்தி கூறியது
இதில் அசோதர நகரத்து அரசன் இரவிவர்மனது மகள் சுதமதி
ததியர் கச்சய நகரத்து அரசன் துச்சயன் மனைவியாக இருந்தாய்
பதிவிரதியான உனக்கு தாரை தமக்கை, திடீரென இறந்துவிட்டாள்
அதிர்ச்சியில் மயக்கமுற்று கீழே .வீழ்ந்து நீயும் உயிர் விட்டாய்
( ததியர் : அடியார்.)

அடுத்த பிறவியில் கௌசிகன், பார்ப்பனன் மகளாகப் பிறந்தாய்
வடுகன் மாருத வேகன் , விஞ்சையனால் இந்த நகர் புகுந்தாய்
இடுகு உன் தமக்கை தாரை மாதவியாகப் பிறந்தாள். உன் தோழி
அடுத்த எழாம் நாள் மணிமேகலை தவசியாக இங்கு வருவாள்
( வடுகன் : வஞ்சகன், இடுகு : அடக்கமான )

4.மாதவி :

முற்பிறவி வரலாறு கேட்ட சுதமதி தோழி மாதவி காணச் சென்றாள்
கற்பில் சிறந்த மாதவி தன் மகள் வாராத செய்தியை அறிந்தாள்
தற்பெருமை இல்லாத மணிமேகலை பிரிவை நினைந்து வருந்தினாள்
அற்புதமான மணியை இழந்த நாகம் போல் துயருற்றாள் மாதவி

...தொடரும்

கவிஞர் ந. திருக்காமு

# மாரி மறுத்த காலம்

பகலவன் தலைக்குமேல்
உச்சம் கொடுக்க.
புடைசூழ்ந்து எங்கும்
அனலெனத் தெரிக்க.

செடிகளோ தாகத்தின்
உச்சத்தை நெருங்க.
மண்ணும் வறண்டது
நிலமும் பிளவுண்டது.

ஆதவனின் அனலணைப்பு
தாளாத பெரும் களைப்பு.
விலகாத வெப்பம்
வியர்வையில் தெப்பம்.



பருவக் காற்றும்
இடம்பெயர்ந்து விட.
மாரி மறுத்ததேனோ
மேகம் மறந்ததாலோ.

மனமுவந்து சற்றே
மழை அணைத்திட.
மகிழாதோ தரணி
அகலாதோ கனல் பேரணி.

கவிஞர் பாத்திமா சில்மியா, மாவனல்லை (இலங்கை)

# கொடை வள்ளல் சபாநாயகம் பிள்ளை

கோடிநாள் வாழ்வதல்ல வாழ்க்கை
கோடி நெஞ்சங்களில் வாழ்வதே வாழ்க்கை என
தன்னை நாடி வந்தோர்க்கு
வள்ளலாய் வழங்குவீர் ஏற்ற வேலை வாய்ப்பு
அரபுநாட்டு அதிபரே சிறந்த வழிகாட்டி
மரபு மாறாமல் உயர்ந்தீர் வைரமாய் பட்டைதீட்டி
அன்ன சத்திரம் ஆயிரம் நாட்டலை விட வும்
இன்னல்படும் ஏழைக்கு எழுத்தறிவிக்கும் பள்ளிக்கு
வள்ளலாய் அள்ளிக்கொடுக்கும் கொடைத்திறனும் உமக்கு
செல்வத்துப் பயனே ஈதல் என்பர்
ஈதலையும் காதலோடு செய்யும் அன்பர்
கரிசனத்தோடு உதவும் சரித்திர நாயகனே!
அறியா சனங்கள் நெஞ்சில் உமக்கோர் அரியாசனம்
உம்மைப் புரியா சனங்கள் எவரும் உளரோ?
ஈன்ற பொழுதிலும் பெரிதுவக்கும் தன்மகனை
கொடை வள்ளல் எனக்கேட்ட தாய் என்பது
தங்களுக்கான தனி மொழி.
எளிமையும் வளமையும் உமக்கு இலக்கணம்
வளமை மிகுந்த போதும் இல்லை தலைக்கனம்
சங்க இலக்கியம் கூறும் கடையேழு வள்ளல்கள்
எங்கள் காலத்தில் யாங்கண்ட நடைபயிலும் வள்ளலே
கிள்ளிக் கொடுக்காமல் அள்ளிக் கொடுப்பீர்
மடை திறந்த வெள்ளமாய் கொடைத்திறன் கண்டு
இமைக்க மறந்தும் வியந்தது உண்டு
அறம் செய்ய விரும்பெனப் பாடிய ஆத்திசூடியை
மறவாமல் கரங்களிலே கைக்கொண்டீர்.
அபாயம் நீக்கி அபயம் அளிப்பவரே
ஆயிரக் கணக்கானோரின் வாழ்வியலில்
சிறப்புப் பாயிரம் நீவிர்.



விமானத்தில் பறந்தாலும் சேவைகளை மறப்பதில்லை
கடல் கடந்து போனாலும் அலைகளும் ஓயாது
கல்விக்குச் செய்யும் சேவைகளும் தேயாது

*கவிஞர் குரு. ஜெயந்தி, சிதம்பரம்*

# அவளுடன் சிறு பயணம்

அவளுக்காக ஆயிரம் கவிதைகளை எழுதினாலும்
ஆயிரத்து ஒன்றாவது கவிதையாய் பட்டியலில்
சேர்ந்து கொண்டே போகட்டுமே
இப்பேருந்து பயண கவிதையும்.

இரு இருக்கைகளுக்கிடையில்
அரை அடி தூர இடைவெளியும்
இடைவிடாத பேச்சு சத்தத்தின் இடையிலும்
பின் இருக்கை தூக்கி போடும் என்று தெரிந்தும் கூட
பின் இருக்கையின் பின்னிய கம்பிகளை பற்றியவாறு
கம்பிகளுக்கிடையில் காதுகளை கொடுத்து
காற்றும் வாங்கி வந்தாள்




முகத்தில் பட்டு படர்ந்த காற்றால்
அவளின் அன்பு பொங்கி பொழிந்தது.
பொழிந்த அன்பு எல்லாம் அவளின்
உணர்வுள்ள உயிர்களால் மட்டுமே நிகழ்ந்தது.
பேருந்து நிறுத்தத்தில் இறங்கியதும்
உன் சேட்டைகளை எல்லாம்
கொஞ்சம் கொஞ்சமாய் செய்கின்றாய்.

சாலையில் குடுகுடுவென ஓட்டம்
நடக்க சொன்னால் பறந்து செல்வது
முன்னாடி செல்லும் பேருந்தை பிடிக்க மாரத்தான் ஓட்டம்
ஓட்டம் முடித்து மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்குவது
இவை எல்லாம் செய்துவிட்டு
ஒன்றுமே தெரியாது போல இருப்பதும்
தெரியாது போல இருப்பதை கண்டு நான் ரசிப்பதும்
பயணத்தின் ஆனந்தம்.

கவிஞர் கு. ரமேஷ்குமார் & ரமேஷ்யோகி, மதுரை

# ஆறுதல்

ஆயிரம்பேர் அருகில் இருந்து
எனக்கு ஆறுதல் கூறினாலும்,
ஆயிரத்தில் ஒருவனாய் இருக்கும்,
நீ எனக்கு ஆறுதல் கூறினால்தான்,
ஆறுதலுக்கு மருந்தாகவும்,
ஆறுதலுக்கு தீர்வாகவும் இருக்கும்.



கவிஞர் பெ. சுரேகா, திண்டுக்கல்

# சிட்டுக்குருவி

எம்மில்லமொரு சோலைவனம் இல்லை யென்றாலும்
எந்தனில்லத்தில் சிற்சில பயன்தரும் மரங்களுண்டு;
அவைதரும் கனிகளைச்சுவைத்திட பைங்கிளிகளும் வருவதுண்டு;
அணில்கள் அங்குமிங்கும் ஓடியாடி விளையாடும்;
அவைதருவத துமுண்டுதொல்லைகள் அவ்வப்போ தெமக்கே!

குருவிகளுமுண்டு எம்மில்ல மரங்களை நம்பி;
காக்கைகளும் சிலநேரம் வந்தங்கு பசியால்
கரைந்தழைத்து எம்மிடம் தமக்கானவுணவு வேண்டுவதும் உண்டு!
கலகலப்பான இப்பறவைகள் ஒலியால் களிக்குமெம்மில்லம்!

பூனையொன்று எங்கிருந்தோ வந்துவொட்டிக் கொண்டதெம்மோடு;
பால்காரர்வரு முன்யானையை முந்திவரும் மணியோசைபோல்
பாலருந்த தவறாதெம்மில் லம்வந்து பாலுக்காயது
படுத்தியெடுக்குமெம் மையதன்பின் சமத்தாய் சிறுநேரமிருந்து
புறப்படும் ஊர்சுற்ற சிறிதும் நன்றியின்றி!



"ஏக்குருவி ஏக்குருவி சிட்டுக்குருவி"யென யென்னை
எனக்குள் பாடவைக்கும் எந்தனில்லக் குருவிகள்;
அதிலொன்று திடீரென எமதுமுன்னனுமதி கோராது
அழகியக்கூடாய் மாற்றியது கூடை யொன்றையது
எமதில்ல முற்றத்தில் கதவருகில் தொங்கியவொன்று!

பாவமந்த குருவியென பரிதாபம்கொண் டதனையப்படி
போனால் போகட்டுமென விட்டுவிட்டோ மானாலந்த
போக்கற்ற குருவியோ வெளியே கதவையாம்
திறந்தால் "சிர்ப்ப்சிர்ப்"பென ஒலியெழுப்ப திடுதிடுவென
திகைக்கும்படி வந்துசேர்கின்றன அடைகாக்குமவளின் கூட்டாளிகள்!

எம்மில்லம் வந்துதம்மினம் பெருக்க அடைகாக்குமந்த
எளிய குருவியின் ஏற்றமிகு பொறுமை கண்டு
எளியோனிதயம் அடையும் களிப்பிற்கு அளவேயில்லை!
குருவியின் குஞ்சினைக் காணநானு மாற்றுகிறேன்
குருவைக்காண சீடனாற்றும் தவத்திற் கொப்பவொன்றினை,
எம்மில்ல பூனையதற்கு ஊறுசெய்திட கூடாதென்றே!

*கவிஞர் தீந்தமிழ் திருமலைக்குமரன் அருணாச்சலம், கோவில்பட்டி*

# நீரோடை

இருமனங்கள் இணைந்து சங்கமித்தது நீரோடையாய்
நீரோடையாய் பீறிட்டு கிளம்பிய சிரிப்பொலியும்
சிரிப்பொலியில் கலந்து தவழ்ந்த காதலும்
காதலுடன் இணைந்தே பிறந்திட்ட அன்பும்
அன்பின் வெளிப்பாடாய் பிறந்திட்ட மகவும்
மகவின் வளர்ச்சியில் பூரித்த பெற்றோரும்
பெற்றோரின் குறிப்பறிந்து நடந்திட இனிமையே
இனிதாய் வாழ்ந்திட மென்மையும் அவசியமே
அவசியம் உணர்ந்து பகட்டை துரத்து
துரத்திடு தூரமாய் தீய எண்ணங்களை
எண்ணமது சீரானால் தெளிந்த நீரோடைதானே
நீரோடையில் நீயும் நீந்தி மகிழ்ந்திடு
மகிழ்ந்திடு நீ என்றும் என்றென்றும்.



கவிஞர் இரா. கோமதி, பொள்ளாச்சி

இதோ
பூமிக்கு பயணம் வந்து
சுற்றி பார்த்து புறப்படும் வேளை

வந்த இடம் எனதென்று
வாய்தா வாங்க முடியாது
பிரியமானவர் போகிறார் என்பதால்
சேர்ந்து போக இயலாது

காசின்றி ஓசியில்
பூமிக்கு தான் வந்தோம்
செலவின்றி சுவாசித்துபூமி
சுற்றி(ற) வாழ்கிறோம்
சுவாசம் நின்ற பின்
ஆகாசம்தான் செல்வோம்

பெற்றவர் வாரார்
பெற்றதும் வாரார்
சுற்றமும் வாரார்
நட்பதும் வாரார்

கற்றதும் வாரா
பெற்றதும் வாரா
பெட்டியும் வாரா
கட்டையும் வாரா

போட்டது போட்டபடி புறப்பட வேண்டும்
வந்த இடத்திற்கே
எரிக்கும் இடத்தில் கிடக்கும் உடலை பார்த்தே
அடித்து அழுவார்

நெருப்போடு எரிந்து
நம் இருப்பும்தான் மறையும்
மண்ணில் சிதைந்து
நம் எண்ணமும்தான் புதையும்

வீடு வந்து நீராடி உள்ளே வந்தபின்
இதோ தொடங்கும் IPL
அன்போடு இருந்து விட்டு
அதனையும் இறுதி விட்டு செல்வோம்

ஏனெனில்
நம் நினைவாக வேறொன்றும்
இருக்க போவதில்லை

இவ்வுலகில்
நாம் விட்டு செல்லும் அன்பை தவிர.



கவிஞர் மு. சரவணன், மயிலாடுதுறை

# அத்தானாக அருகே அணை

எனதருமைச் சமுதாயமே
அந்நியப்படுத்தாதே!
***

என்னைக் குருடனென்றும்
செவிடனென்றும்
முடவனென்றும்
மூங்கையனென்றும்
விமர்சித்தாலும்
வெறுக்கமாட்டேனே உன்னை!
***

உனக்கும் எனக்கும்
இடையிலான காதலோ இறுக்கமானது!
மிகவும் நெருக்கமானது!
***

இதற்கு ஆப்பு வைத்து
என்னை அந்நியப்படுத்தவே
என்றுமே துடிக்கிறாயே நீ
துடி.
***

நீயோ அந்நியப்படுத்த
அந்நியப்படுத்த - நானோ
அருகருகே அண்மித்து வருவேனே!
***

அணை - என்னை
இறுக்கமாகவே இணை!
***

இந்த அணைப்பும்
இன்னரும் பிணைப்பும்
இல்லையென்றால் உன்னை
வாசிப்பது யாரென்று
வீணையுனக்கு விளங்காதோ?
***

இனியும் அந்நியப்படுத்தாதே
என்னை அருகே அணை
அத்தானாக!
***

உன்னை இன்னும் நான்
பாட வேண்டுமே!
பண்படுத்தியே ஆகவேண்டுமே!
***

வாழ்க்கை உயிர் நதி!
வாழ்ந்து காட்டுதல் உயர் மதி!
***

வானம் உனக்காக!
வையகம் உனக்காக!
நான் உனக்காக!
நீ எனக்காக! - எமக்காக!
***

சமுதாயமே சிந்தி!
சூரியும் சகதியும்
சதாநாளும் அணியாதே!
புரியும் வகையாக
புத்தொளி பானுவாக
புத்தெழுர்ச்சி பெறு!
***

பனி விலகும்!
பாதை தெரியும்!
உலகம் உன்னை
வரலாறாய் எழுதும்!



கவிஞர் விவேகவெளி தமிழேந்திரன், கிழக்கு மாகாணம், இலங்கை

# ஆதவனின் கோடைச்சலுகை

கருகிக் கொண்டேயிருக்கும்
வாலிபப் பருவத்தில்
பட்டறைக் கருவாடாய்
மண்ணிற்குள் புதைந்திருந்த
மணம் முடிக்கும் ஆசை
வெளியுலகம் காண்கிறது.

நெருங்கும் பங்குனித் திருவிழா
பரணிலிருந்து விடுதலை பெற்று
தேய்க்க தேய்க்க
வெண்கலப் பானையாய்
மின்னும் அவள் கருயிடையால்.



கவிஞர் ஸ்ரீவி. முத்துவேல், சென்னை

# மனைவி

உறவுகள் சிறு
இடைவெளி தரும் காலங்களில்,
நெருங்கிய உறவே
நீதானே என்று
உன் நெற்றியிலே மையிட்டு,
மனதிலும்,
மனையிலும் பூத்த பூவாய்
என்னுடன் கைகோர்த்தாய்,
நீயே என் உறவென்று,
தடைகள் வரும்போது
தடமாகவும்,
தடுமாறும்போது
ஊன்றுகோலாகவும்,
கலங்கி நிற்கும் போது அன்னையாகவும்,
உனது வலிகள் மறந்து
விளக்கின் வெளிச்சமாய்
ஒளிரச் செய்து
தாயாக மாறுகிறாயே
மனைவியாய்!
இப்பொழுதே பூரித்து கொள்கிறேன்
நீயே! என் வாழ்க்கையென்று.



கவிஞர் ரெ. மாணிக்கவேல், நீடாமங்கலம்

# ஈரோடு வெயில்

உடலும் உடையும்
நனைந்த வண்ணம்
வியர்வைப் பெருக்கு

மிகப்பெரிய அடுப்புக்குள்
அகப்பட்ட ஊர்
அனலிட்ட புழுவாய் மக்கள்

மரங்களின் மரணம்
வெப்ப அஞ்சலி
செலுத்தியது சூரியன்




சிட்டுக்குருவி அழிவுக்கு
கண்டனத் தீர்மானமாய்
கடும் வெப்பம்

மரங்களை விதைக்காததற்கு
தண்டனை விதிக்கப்பட்டது
கடும் வெப்பத்தில் வாட.

கவிஞர் செ. இலட்சுமணக்குமார், ஈரோடு

# சுவாசலயம்

உனக்காக காத்திருக்கும்
கடிகார முள்ளின்
மைக்ரோ நொடி
ஓசைக்குள் உந்தன்
சுவாசலயம்.



கவிஞர் சாந்தாதேவி, சென்னை

# பொருத்தமாம் பொருத்தம்

வாரப்படாத
கூந்தலின் கசங்கல்
கவிதை பேசியது

கணுக்கால் ஏற்றிய சேலை
கோபத்தில் உலாத்திய நொடிகளில்

ஆதவனை கண்டு
சுருக்கிய விழிகள்
சுறுசுறுப்பை கூட்டியப்படி

வயிற்று பாட்டின்
வழிக்கும் வழிதேடி
ஆணுக்கும் பெண்ணுக்கும்
பொருத்தங்கள்

பத்தா பனிரெண்டா
ஒன்றா இரண்டா
என்ன பொருத்தம்
இதுவரை நினைவுக்கரைசலை
அலசி அலசி அலுத்தேப்போனது

கடமை என்ன இணையோடு
கூடிப்பிரிந்து பித்தத்தை
தலைக்கேற்றி திரியும்
ஆணென்ற ஆதிக்கத்தில்
இதோ நாலு மக்களைப் பெற்றதே
பொருத்தின் பலன்




கடமை முடிந்தது
கைவீசி காற்றோடு கலந்தே போனது
கைபிடித்தவனின் கடமை முடிந்தது.

பாரம் சுமந்து
பிசிறு தட்டிய கூந்தலை
முடிய நேரமின்றி
உழைப்பின் வாசலை
அடைக்கவும் வழியின்றி
பயணங்கள் தொடர்கதையாய்

பத்து பொருத்தமும்
பொருந்தவே இல்லையே
இறைவனின் ஆட்டத்தில்
பொம்மைகளாகிய கவிதைகள்

கவிஞர் கனகசுந்தரி பாஸ்கரன், திருப்பூண்டி (நாகை மாவட்டம்)

# ஓவியம் விளையாடும்

உண்மையாகிய பொய்கள்
காயமாகும் யதார்த்தம்

உறுத்தா மனதில்
உறுதியற்ற அலட்சியம்

வேண்டாத மெய்யில்
தேவைக்கு பொய்கள்

திரியும் தென்றலில்
திராணியற்ற ஓய்வு

தீராத பேச்சில்
நீர்த்து போகும் ஆவல்

வன் குரலில் வளை இறுக்கி
வாதிடாத கனம் துவளும்

மென்வீச்சு மௌனங்கள்
விழியில் தேக்கி
கன்னக் கிறுக்கலில்
பலகதை பேசும்

வளையாத மூங்கில்
வடிவாகா தென
ஒடித்து வைத்து
ஓவியம் கலைத்து
விளையாடும்!



கவிஞர் ஜெயப்பிரபா, சென்னை 81

# தாய்மை

தாய்மைக்கு நிகர் தாயைத் தவிர
வேறில்லையே மண்ணிலே
பாதுகாப்போடு பாசம் தருபவள் அன்னையவள்
எம் தவறால் நோக்கினாலும் நொந்தாலும்
விட்டிட மாட்டாள்
சுட்டிக்காட்டி பிழையை உணர்த்துவாள்
சிணுங்கினாலும் ,சிரித்தாலும்
எம்மை நலவென்றே காப்பாய்
காக்கும் காவலாய் தாங்கும் தூணாகிடுவாள்



இந்த தாய்மைக்காகதானே
வெட்கத்தை மறைத்து
மகவொன்றைப் பெற்றெடுக்க
நினைக்கிறாள் பெண்ணவள்

கோடிகள் கொடுத்தேனும்
மகவைச் சுமக்க வைத்தியங்களைச்
சந்திக்கிறாளே பெண்ணவள்

சொத்துக்கள் கரைத்தேனும்
சொத்தாய் முத்தொன்றைப் பெற்று
தாய்மைப் பெற நினைப்பாளே பெண்ணவள்

தாய்மைச் சுமக்கின்ற ஆண்களும் இங்குண்டே
தாரத்தை இழந்தும் தனியாக நின்று
தம்பிள்ளையை வாழ்ந்திடுவானே
தன் தேவைக்காகப் பெண்ணை நாடும் ஆணோ
தாய்மை போர்த்திட்டு தம் பிள்ளைக்காக
மாற்றிடுவானே தன்னைத் தானே

கவிஞர் சஹீனாஸ் பேகம், புத்தளம் (இலங்கை)

# வாழ்க்கை

வாழ்க்கை என்பது பாலைவனமே
முயன்றால் மாற்றலாம் நந்தவனமாய்

வாழ்க்கை முறையை மாற்ற வேண்டும்
இல்லையேல் வாழ்க்கையே மாற்ற வேண்டும்

தேடிக் கொண்டிருப்பதில்லை வாழ்க்கை
வாழ்ந்து கொண்டே தேடுவது வாழ்க்கை

பிறப்புக்கும் இறப்புக்கும் இடைப்பட்ட
கொஞ்ச நேரமே வாழ்க்கை.
வாழ்வோம் புரிந்து வளமாய் இன்று

அன்போ பகையோ சகிப்புத்தன்மை இருந்தால்
வாழ்க்கை வசப்படும்

வித்தாய் நினைத்து நற்சாய் போன
வாழ்வும் ஒரு நாள் விடியும்.

பொழுது விடியும் ! துயர் வடியும் !
வெள்ளம் வடியும்! வளமாகும் வாழ்வு!
நம்பிக்கை கொள்வோம் வாழ்வு வசப்படும் !



கவிஞர் ஜேபிபி. பன்னீர்செல்வம், சேத்தியாதோப்பு

# ஈகைப் புகழ்

தயங்கித்தான் செல்கிறான் தத்ரூப நாயகனோ
வயிற்றுப் பசியால் வரிசையில் நிற்பதற்கு
உத்தமனோ தர்மசீலனோ கைநீட்டிக் கொடுப்பதெல்லாம்
நொடிப் பொழுதில் புகழ் சேர்க்க
ஒரு கை கொடுக்க மறு கை எடுக்க
புலனத்தில் கவனம் கொண்டு
சமூக வலைதனில் பதிவேற்றம்



கையுறை அணிந்து கரம் கொள்ளாமல் மனமின்றி
மாருதமாய் ஈகை கொண்டு புகழ் தேடிடும் விளம்பரம்
போதை கொண்டு புலனத்தில் புகையென பரவிடும்
நரகத்தின் ஈதலான  யாசகம்
அவன் மட்டும் குறுகவில்லை அவன் கிளைகளும் குறுகியது
துள்ளித் திரியும் வயதினிலே அள்ளிக் கொள்ளும் மகிழ்ச்சியை
பலிகொண்ட வறுமையினால்உடல் மெலிந்த பிஞ்சுகள்

ஒரு நேர உணவுக்காய் கை நீட்டி கருப்பொருளாய்
விளம்பரத்தில் வீதியுலா வர வேண்டும் என் செய்வான்
ஒரு பையை உடன் நீட்டி தமுக்கடித்து சொல்லுகிறான்
கையில் ஏதும் தாராது நீட்டுவதோ புகைப்படமாய்
வயிற்றுக்கு ஈகை தந்து வசதியாய் அவன் செல்ல
வலம் வருவோம் என்று எண்ணி ஏக்கத்துடன் கை கொடுத்தேன்
கடனான உன் புகழ் ஆழ்கடல் சென்று திரும்பாது
முகம் பார்த்து அகம் மகிழ்ந்திடு ஆறுதலாய் ஈகை செய்து

கவிஞர் சுதாகரன் சுஜிரேக்கா, திருகோணமலை இலங்கை

# அந்த உருவம்

பூச்சிகளின்
குரலுக்கென்று
செவி சாய்க்கும்
ஆளற்ற
தெருக்களின்
ஆர்ப்பாட்டமில்லா
இரவு அது

தூங்கி வழியும்
தெருவிளக்குகள்
தேர்தல் கால
விழா போல
தேநீர் அருந்தி
சுறுசுறுப்பாய்

ஆங்காங்கே
திண்ணைகளில்
வெள்ளி கம்பி
தலைகள்

கல்லடி படா
நாய்களின்
சுதந்திர
ஓலம்

கதவு இடுக்கில்
கைகள் மறைத்த
கண்கள்,
விரல்கள் சற்று
விலகிக் கொள்ள

அரங்கேறுகிறது
இரவு கதாநாயகனின்
அறிமுகம்
கிட்டத்தட்ட
திகில் திரைப்படம்
போல

ஓட்டை வழியே
ஒழுகும்
நிலவொளியில்
அந்த உருவம்



பயமும்
ஆச்சரியமும்
தூக்கம் கலைக்க
ஒரு
குழந்தை போல
எழுந்திருக்கிறேன்

என்னை
அறியாமலேயே
புலம்புகிறேன்
"நல்ல காலம் பொறக்குது"

(குறிப்பு: அன்றைய காலகட்டத்தின் சுவாரசிய பக்கங்களில் பயமுறுத்தும் கதாபாத்திரமாக இருந்தாலும் காலக் கல்வெட்டின் மறக்க முடியா குழந்தை கதாநாயகர்கள் குடுகுடுப்பைக்காரர்கள்)

கவிஞர் அன்னலட்சுமி சரவணன், ஈரோடு

# உடன் பிறந்தோர்

நம்மை சுற்றி இருக்கும் உடன் பிறந்தோரின்
நலன்களும் பிரச்சினைகளும் வாழ்வின்
முக்கிய பங்காகவே செயல்படுத்தி வருகிறோமே.
சிறு குழந்தைகளாக இருக்கும்போது
நாம் பகிர்ந்து உண்டு விளையாடி களித்தோமே.

தம்பி உடையான் படைக்கு அஞ்சான்.
ராமருக்கு பன்னிரண்டு ஆண்டுகள் வனவாசத்திலே
எந்தவித எதிர்பார்ப்புமின்றி லட்சுமனின் பங்கு அளப்பரியதே.
உடன் பிறந்தோர் மட்டுமே
சகோதரர்கள் அல்லவே குகனோடு ஐவரானோம்
என்று ராமபிரான் குகனை இறுகத் தழுவி
தன் அன்பை வெளிப் படுத்தினாரே.

"தான் ஆடாவிட்டாலும் தன் தசை ஆடும்"
இதுவும் ஒரு பழமொழியே!
சகோதரியாகட்டும் சகோதரனாகட்டும்
யாருக்குத்தான் பிரச்சனை இல்லை?



அவர்களின் விழி நீரை துடைத்து
ஆறுதல் வார்த்தைகளை அளித்து
ஏனைய உதவிகளையும் யார் செய்வார்கள்?
உடன் பிறந்தோரால் மட்டுமே செய்ய முடியும்.

தாய்ப்பறவை தன் குஞ்சுகளை
தன் இறக்கைக்குள் வைத்து பாதுகாப்பது போல
நம்முடன் பிறந்தோரையும் தம் கண்களாக பாவித்து
உற்ற நேரத்தில் உதவி செய்வோமே!

சில புல்லுருவிகளைப் போல
நம் வளர்ச்சிகளை பொறுக்காதவர்களும் உண்டு.
கூட இருந்தே குழிப்பறிப்பவர்களும் இக்காலத்திலும் உண்டு.
அன்னப் பறவை போல பாலை மட்டுமே அருந்தி
தண்ணீரை விடுத்து சமயம் பார்த்து விலகத்தான் வேண்டுமே!

ஆனால் காலச்சக்கரம் என்று ஒன்று உண்டு.
அது நல்வழிப்படுத்தி நம்மை வந்தடைய செய்யுமே!
ரத்த பாசம் விட்டுப் போகாதே!

கவிஞர் ஆ. கிருஷ்ணவேணி, ஊத்தங்கரை

# பிரியாத வரம் வேண்டும்

அமுதொன்று படைத்து
அழைத்திட வந்தேன்
அடுக்கு மாடி குடியிருப்பில்.
அழைக்கும் குரல் கேட்டு
அருகினில் ஒன்று கூடி வந்தனர்.

அன்பிற்கு உரியவர் யாரென
அறியாமல் விழி பிதுங்கி நின்றேன்
அறிந்து கொள்ள ஆவலுடன் அணுகினேன்.



அதிரடியாய் தலையசைத்து
சீற்றத்துடன் நின்று
அடையாளம் தந்தாய்
அசடு வழிய நின்றேன்.

இன்னல் பல வந்தாலும்
இன்முகம் காட்டினால்
இயல்பாகும் உந்தன் சுபாவம்
அன்று தொட்ட நாள் முதல்
இன்று வரை காண்கிறேன்
உருவத்தில் மட்டுமே ஏ(ன்) மாற்றம்

நீ ,கரைந்து வந்து பிடித்த உணவை
ரசித்து ருசிக்கும் அழகைக் காண
தினமும் ஒரே குதூகலம் தான்.

உள்ளத்தில் பிரதிபலிக்கும்
உந்தன் பிம்பம்
என்னுள் சுழல் காற்றென சுழல்கிறது
உனக்கும், எனக்குமான பிணைப்பில்
பரிபூரணமானது வாழ்க்கை.

கடந்த பொழுதுகள் நேற்றும்
நிறைந்த மனதில் இன்றும்
மலரும் நினைவுகள் என்றென்றும்.

என் உள்ளக்குமுறலை ஆசுவாசமாய்
அனுதினமும் கதைத்து விட்டேன்.
இனி, வேறெதுவும் தேவையில்லை

உன் நினைவுகள் ஒன்றே பரிசாக
பிரியாத வரம் வேண்டும்
இத்திருமணநாளில்.

கவிஞர் குணசுந்தரி சிவா, காஞ்சிபுரம்

# விழுந்து மடிகிறேனே

விடாத உழைப்பிற்கு
விடுப்பாக நாட்களும் வந்ததே

வில்லுபாட்டிசையாக
விருப்பமனமில்லை

விரும்பா ஓய்வும் சலித்ததே,
விஞ்சுகின்ற கவலைகளிலே

விநாடி பொழுதுகளும்
விரிந்தே பறக்கிறது

விடுபட்டு போனதே நம்பிக்கைகளும்,
வினாயெழுப்பிய மனதிலே

விடியல் வருமென நினைத்த நேரமதில்
விடியவே கூடாதென

விதித்தவன் தவத்திற்கே வரம் தந்தானோ
விதியை வென்றிட மதி மழுங்கியதே

விண் தாண்டும் ஏவுகணைகளாக
விதவிதமான எண்ண அலைகள்

வித்தியாசமான மாற்றமென நினைக்க
வித்துகூட நாசமாகியதே

விந்தையென்ன தெரியாமலே
விழியோர துயில் அகன்றதே

விந்தி விந்தி அடியெடுத்து நடக்குமுன்னே
விபத்தால் எல்லாம் தலைகீழானதே

விம்மியழ கண்ணீரும் வற்றியதே
விம்மலும் மௌனமாக கரைந்ததே

வியர்வையிலே குளித்த நாட்கள்
வியத்தகு மகிழ்ச்சி தந்ததே

விருப்பத்தோடு செய்யும் எதுவும்
விருப்பமில்லாமல் நமை விட்டு ஓடிடுமோ

விரைந்தோடி திரிந்த நாட்கள்
விலையில்லா இலவசமானதோ

வில்லங்கமான மாற்றத்தால்
விவரமறிந்தும் செயலற்றேனே

விழைந்து வரும் எதிர் கேள்விகளுக்கு
விடை தெரியாத ஊமையானனே

விறகு எறிந்து கரியாகி
விறகுகரியும் சாம்பாலாகி மாயமானதே

வினைச்செயல் புரியாமல்
வின்னென்று கீழே விழுந்து மடிகிறேனே!



கவிஞர் நீலாசுபாஷ், ஆக்கூர்

# செல்ல மகள்

அன்பின் உருவமானவள்
ஆசையை அறியாதவள்
இன்பத்தை ஈடில்லாமல் தரும்
உன்னதமானவள்
ஊமை மொழியுடையவள்
என் உலகமானவள்
ஏக்கம் தீர்த்தவள்
ஐயம் மறந்தவள்
ஒன்றிரல்ல
ஓராயிரம் கவலையும்
மறையும் இவள் மழலை
முகம் கண்டால்



கவிஞர் ஜோ. மஞ்சு, மருங்கூர்

# அழகி இவள்

நீ எப்படி இருப்பாய் என்பதை
எழுத நினைக்கும் போது
நான் எழுதும் பேனாவின் மையம்
பெருமூச்சு விட்டது

வரிகளுக்கே சவால்விடும்
கவிதைக்காரி நீ

உண்மையில் எப்படி இருப்பாய்
உன் கருநிறகூந்தல்
உன் இடுப்பைத் தாண்டுமா?

அழகில் அகத்தை வெல்லும் முகம்
அந்த அழகான நிலவையும் வெல்லுமா?

நீ பரீதா அணிந்த போர்வையில்
தெரியும் உன் விழிகளும்
என் இதயத்தை திருடுமா?

நீ கதைக்கும் போது
உன் கதையோடு சிரிப்பு கும்மாலமிடுமா?

முடியவில்லை பெண்ணே
என்னால் எழுத முடியவில்லை

உன் அழகை உன் பார்வையை மறைக்கிறது
உன் பார்வையில் இருந்தே
என்னால் தாண்ட முடியவில்லை


உன் பார்வைதான் அழகு என்று
உன்னை பார்க்காமலே கூறுகிறேன்



கவிஞர் சாதீக் பாத்திமா சமீஹா, மூதூர் (இலங்கை)

# உழைப்ப சுரண்டல்

உழைப்பவன் உதிரம்
சிந்தி உழைக்கிறான் - சில
உன்னிகள் அவனுதிரம்
குடித்து வளர்கிறான் - ஏழை
உடல்வெட்டித் சுவைபார்க்க
பணக்காரன் துடிக்கிறான் - அவன்
வயிற்மேலே வயிற்வளர்த்து
பிரசவப் பெண்போல் திரிகிறான்



பயிர்போட்ட உழவன்
சேற்றைத் திண்டு செரிக்கிறான்.
ஒருநேர உணவுக்காக
ஓராயிரம் வகையில் சமைக்கிறான்.
பொதுவுடமை என்றுசெல்லி
தன்னுடமை வளர்க்கிறான் - ஆட்சியாளன்
கூட்டத்தில் கோசமிட்டு
கூட்டத்தில் கூடவிருந்து.

குழித்தோண்டிக் கொடுக்கிறான்
ஏழையை பலியாடாய் ஆக்குறான்
சுரண்டிச் சுரண்டியே
வரண்டு போகிறான் உழைப்பவன்.

கவிஞர் கோ. தினுசன், மட்டக்களப்பு (இலங்கை)

பெரியாழ்வார் பிள்ளைத்தமிழ் தேமதுரத் தீந்தமிழில்
தொண்ணூற்று ஆறுவகை பிரபந்த ஒன்றாகும்!
குழந்தையாய் உருவகித்து கற்பனைசேர் பாவகையே!
தெய்வமொடு சமயாசார் புலமையர் மடாதிபதி
அரசர்கள் புரவலர்கள் உகந்தவர்கள் இவரெலாமும்
பாடுபொருளே! பருவவகை பாகுபாடு கொண்டதிது!
தமிழ்படைப்பு ஈராயிரம் ஆண்டின்மேல் வாழ்வினது!
இயற்றமிழில் பலவகைகள் இதற்குண்டே! ஆண்டாண்டும்
நவநவமாய்ச் சேர்ந்திடுமே ! பலசங்கம் வளர்த்தனவே!
அண்மையில் தமிழகத்துப் புலவர்குழாம் வளர்க்கிறதே!
பிள்ளைத்தமிழ் பருவங்கள் பாகுபாடு: முதலிரண்டு
திங்கள்வரை வெளிக்கொணரார்! மூன்றுகாப்பு! ஐந்தாகும்
செங்கீரை ! ஏழாகும் தாலாட்டே! ஒன்பதென்பர்
சப்பாணி! பதினொன்றோ முத்தமதே! பதின்மூன்று
வருகையாம்! பதினைந்து அம்புலியே! பதினேழு
சிற்றில்லும் நீராடல்! பத்தொன்பது சிறுபறையும்
அம்மானை! இருபத்து ஒன்றமையும் சிறுதேரும்
ஊசலென்பர்! காப்புவேண்டல் திருமாலிடம்! பிள்ளைத்தமிழ்
சிலகாண்போம்: சிவன்தெழுந்த பல்லவன்மேல் பருவத்துக்
கேழ்பாடல்! கலைசிசெங்கழு நீர்விநாயக ரைந்தமைவே!
பழநியாண்டி மூன்றளவே! சம்பந்தர் நாவரசர்
ஒவ்வொன்றே! ஆண்டாள்மேல் மாறுபட்ட எண்ணிக்கை!
பெரியாழ்வார் பிள்ளைத்தமிழ் முன்னோடி! முதலாவது
குலோத்துங்க சோழன்மேல்! ஆண்பெண்ணாம் பாலரார்கள்
இறைவியென இறைவனுமே கவிஞரொடு சான்றோரும்
நாடாள்வோர்! மக்கள்தம் நற்றலைவர்! இவரெலாமும்
பாடுபொருளே! பெரியாழ்வார் படைத்திடாத மற்றமைந்த
பிள்ளைத்தமிழ் நூற்றோடு தொண்ணூற்று இரண்டுண்டே!
பின்னொன்று தொடர்ந்திட்டே முற்றுப்பெறும்! கோதையவள்
சீர்த்தியெலாம் காண்போமே! அடிப்பொடிபாண் சுவைப்போமே





கவிஞர் கணக்காயன் (இ. சே. இராமன்)

# அப்பாவின் பனியன்!



வீட்டின் கூரையில்
மட்டுமல்ல ஓட்டைகள்!
அப்பாவின் பனியனிலும்
ஆங்காங்கே பொத்தல்கள்!
வாழ்வாதாரம் காக்க
வந்துதித்த அவதாரம்!

வறுமையின் கொடையினை
பெருமையுடன் தாங்கியதே!
பிள்ளைகளின் பிஞ்சுக்
கரங்களின் விளையாட்டால்
எண்ணிக்கை கூடியதே!

பின்னாளில்
ஒட்டிய வீட்டில்
அவரில்லை! வெற்றிடமே!
அவருழைப்பை
எண்ணிப் பார்க்கையில்
கண்ணீர்த் துளிகளால்
நனைகிறதே
எந்தன் புத்தாடை!

கவிஞர் ஏ. சீ. சேஷாத்ரி

**பூங்கொடி பாலமுருகன்**
**வெளியீடு புக்ஸ் ஃபார் சில்ரன்**
**முதல் பதிப்பு ஆகஸ்ட் 2022**
**பக்கம் 88 ; விலை ரூ 80**




மனிதர்களின் வாழ்வில் மறக்க முடியாத பருவமாகவும் மகிழ்ச்சி நிறைந்த பருவமாகவும் எல்லோரது நினைவுகளிலும் மீண்டும் மீண்டும் திரும்பச் செல்லும் எண்ணத்தைத் தூண்டும் பருவமாகவும் அமைந்திருக்கும் குழந்தைப் பருவத்தை நமக்குள் அறிமுகப்படுத்தும் உலக திரைப்படங்கள் பற்றிய கட்டுரைத் தொகுப்பு நூல் இது.

கவலைகள் மறந்து கற்பனை உலகில் கொடி கட்டிப் பறக்கும் சிறுவர்களின் மனங்களுக்குள் எப்போதும் வண்ணக் கனவுகளே விரிகின்றன.அத்தகு குழந்தைகளின் எண்ணங்களை மேலும் விரிவுபடுத்தவும் அறம் சார்ந்த சிந்தனைகளையும் தன்னம்பிக்கையையும் விதைத்து சிறந்த குணநலன்களுடனும் பண்புகளுடனும் புதியதொரு உலகத்தை படைத்திட சிறுவர்களுக்கான வழிகாட்டுதல் மிக மிக அவசியம்.

இந்தி குஜராத்தி மலையாளம் ஈரானிய மொழி என உலகின் பல்வேறு மொழிகளில் வெளியான சிறார் திரைப்படங்கள் 13 பற்றிய விளக்கமும் விவரிப்பும் அடங்கிய இத்தொகுப்பில் அன்பும் கருணையும் மனித நேயமும் விசாலப் பார்வையும் விளைந்து நிற்கின்றன. நாடகங்களைத் தாண்டி திரைப்படங்கள் இன்று எல்லோர் மனதிற்குள்ளும் சிம்மாசனம் இட்டு அமர்ந்து கொள்கின்றன.

கணிதப் பாடத்தின் மீது கொண்ட வெறுப்பின் காரணமாக கல்வியை வெறுக்கும் சிறுவனிடம் வீட்டுப்பாடத்தை தானே செய்யும் மந்திரப் பேனா கிடைத்தால் எப்படி இருக்கும்? அதை வைத்து தனக்கான தேவைகளை மட்டுமல்ல தனது நண்பர்களுக்கான நேசத்தையும் அவர்களுக்கான உணர்வுகளையும் புரிந்து கொண்டு கல்வியின் மகத்துவத்தை அறியத் துவங்கும் மாணவனின் மனதினை வெகுவாக பிரதிபலிக்கிறது பிலிப்ஸ் அண்ட் தி மங்கி பென் என்ற மலையாள திரைப்படம். ஆசிரியர்களே குழந்தைகளின் உளவியலை நன்கு அறிந்து கொண்டு அவர்களைச் சரியாக வழிநடத்திட உதவுகிறது என்பதை இப்படம் சிறப்பாக எடுத்துக்காட்டுகிறது.

கவிஞர் திரு இளையவன் சிவா, நரசிங்காபுரம்

பெற்றோர் இல்லாமல் தாய் மாமாவிடம் வளரும் சிறுவன் அவரது எல்லா விதமான துன்புறுத்தல்களுக்கும் ஆளாகிக் கொண்டு பள்ளிக்குச் செல்கிறான். ஆனால் எந்த ஒரு இடத்திலும் தனது இயலாமையை வலியை வேதனையை வெளிப்படுத்தாமல் காணும் எல்லோரிடமும் சிரிக்க சிரிக்க விளையாட்டாகப் பேசி தனக்கான கற்பனை உலகத்தை எல்லோர் மனங்களிலும் விதைத்துச் செல்கிறது அக்குழந்தையின் அன்பு மனம். தன்னுடைய சோகத்தை வெளிப்படுத்தி மற்றவர்களிடம் ஆறுதல் தேட விரும்பாமல் தனது நண்பர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் எப்போதும் மகிழ்ச்சியையும் சந்தோஷத்தையும் மட்டுமே தரும் ஸ்டான்லி வழியாக குழந்தைகளின் அக உலகத்தை சிறப்பாக எடுத்துக்காட்டுகிறது ஸ்டேன்லி கா டுப்பா என்ற ஹிந்தி திரைப்படம்.

விடுமுறைக்கு பாட்டி வீட்டிற்கு செல்லும் சிறுவன் பாட்டியின் அன்பை கொஞ்சம் கொஞ்சமாக உணரும் தருணத்தில் அவர்களுக்குள் ஏற்படுகிறது பிரிவு. பாட்டியின் அன்பை முழுமையாக உணரத் துவங்கிய சிறுவனுக்குள் அன்பு எவ்விதமான மாற்றங்களை உண்டாக்குகிறது என்பதை அழகாக எடுத்துக் கூறுகிறது த வே ஹோம் என்ற கொரியத் திரைப்படம்.

இயற்கை மற்றும் தொழில்நுட்பத்துடன் மனித குலத்தின் உறவு இயற்கையான மற்றும் பாரம்பரிய வாழ்க்கை முறைகளால் வரும் ஆரோக்கியம் நிறைந்த அமைதியான வாழ்க்கை இவற்றிலிருந்து மனிதர்கள் கற்றுக் கொள்ள ஏராளமான கருப்பொருட்கள் உள்ளன என்பதை எடுத்துக் கூறுகிறது மை நெய்பர் டோட்டோரோ என்ற ஜப்பானின் மொழி திரைப்படம்.

குழந்தைகளை அச்சுறுத்தியும் கண்டித்தும் அவர்களின் போக்கை மாற்றி விட முடியாது. தேர்வின் மீதான பயத்தினாலும் பெற்றோரின் மீதான பயத்தினாலும் கல்வியை முழுமையாகப் பெறாத மூன்று மாணவர்கள் அவர்களுக்கு வழங்கப்பட்ட பரிசாகப் பெற்ற பொம்மைக்கு பாடம் நடத்தினால் அவர்களது எல்லா குறைகளும் தீரும் என்ற பரிசளித்தவரின் வேண்டுகோளை ஏற்று மூவரும் படிக்கத் துவங்குகின்றனர். அதன் வழியே கல்வியை முழுமையாக உணரத் துவங்குகின்றனர். குழந்தைகளின் மனங்களில் அன்பும் நேசமுமே அவர்களது பாதைகளை முழுமையாக நிர்ணயிக்கின்றன என்பதை அருமையாக எடுத்துச் சொல்கிறது டி ஹச் ஹச் என்ற குஜராத்தி மொழி படம்.

எல்லாம் இருக்கும் குழந்தைகளுக்கும் எந்த வசதியும் இல்லாமல் அனாதையாய் இருக்கும் குழந்தைக்கும் ஏற்படும் நட்பும் நேசமும் எப்படி அவர்களது வாழ்வை மாற்றுகின்றன என்பதையும் அவர்களின் நட்பு தொடர்கிறதா என்பதையும் குறும்புத்தனமும் சேட்டைகளும் நிறைந்த குழந்தைகளின் அப்பாவித்தனமான பக்கங்களையும் அன்பான நேர்மையான செயல்களையும் அழகாக படம் பிடித்து காட்டுகிறது சில்லார் பார்ட்டி என்ற ஹிந்தி திரைப்படம்.

கவிஞர் திரு இளையவன் சிவா, நரசிங்காபுரம்

எந்த நேரமும், இல்லை என்று சொல்லும் பெற்றோர்களை விட தேவையறிந்து ஆம் சொல்லும் பெற்றோர்களின் மூலம் வளரும் குழந்தைகள் குடும்பத்தின் போக்கை முழுமையாக உணர்ந்து கொண்டு தமது வாழ்க்கை பாதையையும் தெளிவாக தீர்மானிக்கும் என்பதை சுட்டிக்காட்டுகிறது எஸ் டே என்ற ஆங்கில மொழி படம்.

அடித்துட்டு மக்களுக்கும் பொருளாதாரத்தில் பின்தங்கிய மக்களுக்கும் அவர்களது வாழ்வை மிகுந்த உயரத்திற்கு எடுத்துச் சொல்லும் முக்கியமான ஆயுதம் கல்வி. ஆனால் கல்வி கற்பதற்கான வாய்ப்புகள் எல்லோருக்கும் முழுமையாக கிடைப்பதில்லை. இந்நிலையில் வீட்டிலிருந்தே கல்வி கற்கும் ராஜாவின் மகனுக்கும் வீதியில் டீ கடையில் வேலை செய்யும் ஏழை சிறுவனுக்கும் இடையே ஏற்படும் நட்பு எவ்விதம் அவர்களுக்கு முழுமையான கல்வியை பெற்று தருகிறது என்பதை அழகாக எடுத்துச் சொல்கிறது ஐ அம் கலாம் என்ற ஹிந்தி மொழி படம்.

பெற்றோரை இழந்த ஏழை சிறுவனுக்கு அதிர்ஷ்டமாக கிடைக்கிறது சிவப்பு நிற கோட். அதில் அவன் கைவிடும் போதெல்லாம் காசு கிடைக்கிறது. அதை வைத்து தனது நண்பர்களுக்கும் இயலாத நிலையில் உள்ள மாணவர்களுக்கும் நிறைய உதவிகள் செய்கிறான். ஒரு கட்டத்தில் அந்த சிவப்பு நிற கோட் அவனுக்கு மிகப்பெரிய துன்பத்தை விளைவிக்கிறது. இறுதியில் அந்த கோட் என்ன ஆனது? சிறுவன் தனது மகிழ்ச்சியான தருணங்களை எப்படி மீண்டும் பெற்றான் ? என்பதை விவரிக்கிறது கராமட்டி கோட் என்ற ஹிந்தி திரைப்படம்.

பொழுதுபோக்கு அம்சங்களும் கற்பனைத் திறனும் நிறைந்த கலையில் முக்கியமானதொரு இடத்தை பிடித்துள்ள திரைப்படங்கள் வழியாக காண்போரின் மனதிற்குள் புதுப்புது கற்பனை ஆற்றலை வளர வைக்கவும் அவரவர் வாழ்க்கைக்கான சிறப்பான பாதையை கட்டமைக்கவும் திரைப்படங்கள் உதவி செய்தல் அவசியம். சிறார் திரைப்படங்களும் அவ்வகையில் அடுத்த தலைமுறையினரின் கனவுகளுக்கு உயிர் கொடுப்பதற்கு பேருதவி செய்கின்றன. அப்படியான திரைப்படங்கள் பற்றிய அழகானதொரு அறிமுகத்தையும் அன்பையும் நமக்குள் விதைக்கிறது மந்திரக்கோட் நூல்.

கவிஞர் திரு இளையவன் சிவா, நரசிங்காபுரம்

# பூப்பூக்கும் ஓசை

## புத்தக அனுபவம் — கவிதைத் தொகுப்பு

**மராத்திய மண்ணிலிருந்து ஒலிக்கும் தமிழ்ப்பூவின் பூக்கும் ஓசை!**




மொழியின் பாதுகாப்பு என்பது அதனைப் பயன்படுத்துவதில் உள்ளது. இயல், இசை, நாடகம் என விரியும் மொழியின் வழியில் படைப்பாளிகள் தன்னுடைய பங்கினை அளித்து மொழியை உயர்த்துகின்றார்கள். மொழியைப் பயின்றவர்கள் அல்லாது கடைநிலைப் பாமரன் வரை ஏதோ ஒரு வகையில் மொழியின் வழியே பயணிக்கிறார்கள். உரையாடலின் வழியாகவும் கிராமத்துக் கீதங்களான நாட்டுப்புறப் பாடல்கள், நாடகத்திற்கும் முன்னதான கூத்து, இன்னும் பலவற்றின் மூலமும் மொழியின் வழியே தன்னை இணைத்துக் கொள்வோர் ஏராளம். இவ்வாறாக, வட்டார வழக்கில் தொடங்கி ஆட்சி அதிகாரம் வரை செயல்பட மொழியின் துணையின்றிப் பிறிதில்லை. அவ்வழியேதான் மொழியின் உயர்வும் உள்ளது என்பதில் ஐயமும் இல்லை.

தொன்மை, மரபு, புதுமை எனப் பல்வேறு கூறுகளுடன் ஒருங்கே அமையப் பெற்ற பெருமைமிகு நம் தமிழ் மொழி உலகில் முன்னோடியாகத் திகழ்கிறது. அத்தகைய தமிழின் தளத்தில், தொடர்ந்து இயங்கி வருகிறார் கவிஞர் எழுத்தாளர் இரஜகை நிலவன் அவர்கள். நவீன காலத்தின், விரைவு நுகர்விற்கு ஏற்ப, அவர்தம் படைப்புகள், வாசகர்களைச் சென்றடைய, மின்னூல்கள் வழியாக வலம் வருகின்றன.

இதோ இந்த "பூப்பூக்கும் ஓசை"யும் ஒலித்திருப்பது அவ்வாறே ஆகும். இதில் இடம் பெற்ற படைப்புகள் பெரும்பாலும், அவர் அன்றாடம் பங்கேற்கும் கவிதைப் போட்டிகளில் இடம் பெற்றவை. தலைப்பு, சூழல், படம் எனக் கவிதைகளுக்கான உள்ளீடு வெவ்வேறாக இருக்கின்றன. ஒரு கலவையான தொகுப்பாக இதில் அவை விரவியுள்ளன. அவற்றில், வாழ்வியலின் பகுதிகளான, மொழி, மனித உணர்வுகள், கொண்டாட்டங்கள் எனப் பல்வேறு பாடுபொருள்கள் நிறைந்துள்ளன.

திரு மாலதி இராமலிங்கம், புதுச்சேரி

இத்தகைய இம்மின்னூலில், முத்தாய்ப்பான முதல் கவிதையில் "புன்னகை" முதலாக உள்ளது.

"எதிரில் பார்த்த
புன்னகை மலர் ஒன்று
ஒட்டிக்கொண்டது
இதழோடு...

புன்னகைத்தீ என்னுள் பரவுகிறது
நாள் முழுதும்
இதழ்களோடே ஒட்டிக்கொண்டே"

மனிதனுக்கு மட்டுமே வெளிப்படுத்த இயலும் செய்கைகளில் ஒன்றானப் புன்னகை, தீயாக உதட்டில் தொடங்கி நெஞ்சில் நிறைவதைக் காட்டும் கவிதை இதுவாகும்.

"இணைந்த வாழ்வு" எனும் தலைப்பில் உள்ள கவிதையின் நம்பிக்கை வரிகளில் சில இங்கே:

"இணைந்த கைகள்
நான்கானால் எதிர்ப்பு
இருப்பினும் தகர்த்தே
நாளைகளின் வெற்றியாகலாம்"

வாழ்வில் இணைந்திருப்பதால், நாளைகள் நமக்கு வெற்றிதான். அதனால்தான் பெரியோர்கள் அன்றே சொன்னார்கள் "ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு".
மதியின் வழியே விதியையும் மாற்றிட விழையும் ஒரு கவிதையின் வரிகளில்,

"...வாழ்க்கை விளையாட்டு
வாசம் தருவதும்
வாரி விடுவதும்
விதியின் வினையல்லவே" என்கிறார் கவிஞர் இரஜகை நிலவன்.
எல்லாவற்றையும் விதியின் பேரில் முட்டுக் கொடுத்துச் சோம்பியிருக்கும் மனித மனத்திற்கான வரிகள் இவையாகும்.

"உலகின் உயிர்நாடி" எனும் கவிதையில்,"...உயிர்களை வையகத்தில் / வாழவைப்பது உழவுத்தொழிலே..." என்ற வரிகள் கேள்விக்குறியாகும் இன்றைய விவசாயத்தையும், அதன் அவசியத்தையும் உணர்த்துகின்றன.

திரு மாலதி இராமலிங்கம், புதுச்சேரி

"புகைத்தல் உடலுடன் பகைத்தல்" எனும் அறிவுறுத்தும் கவிதையில் ஏனிந்த நிலையென வினாவெழுப்பி, புரிந்துகொள்ளுங்களேன் என்று புகைமன்னர்களை, புவிமன்னர்களாக்க முயற்சித்துள்ளார். கீழ்க்கண்ட வரிகளில் அதனை உணரலாம்.

"...புகைத்தல் தேவையோ
புன்சிரிப்பு மறக்கணுமோ
புவியைக் குலைக்கணுமோ
புரிந்திடுங்களேன் மன்னர்களே...!"

அடுத்து, "வேகப்பயணம்" எனும் ஒரு வரி - படக் கவிதை இதோ,

"இரு உயிர்களின் பணயம்"

"பணயம்" என்ற ஒற்றைச் சொல், இதனைத் தூக்கி நிறுத்துகிறது.

இன்னும் கலவையான கவிதைகளைப் படித்திட மின்னூலை வாசியுங்கள் வாசகர்களே!

மராத்திய மண்ணிலிருந்து, தமிழ்மணம் கமழ்ந்திட ஒலிக்கும் இந்தத் தமிழ்ப்பூவின் ஓசை, அவனியெலாம் ஒலிக்கட்டும்! இலக்கியச் சுற்றமான, அருமை நட்பாளர் கவிஞர் இரஜகை நிலவன் அவர்களின் தூரிகை, தமிழ்ப் பேரிகையைத் தொடர்ந்து முழக்கிட முனையட்டும்!

திரு மாலதி இராமலிங்கம், புதுச்சேரி




நீ வேண்டுமானால் பார். நான் செய்யும் உதவிகளை உணர்ந்து உன் அம்மாவும் அப்பாவும் எனக்கு உன்னைக் கல்யாணம் செய்து வைக்கப் போகிறார்கள்"

"நான் என்ன சொன்னாலும் கேட்கமாட்டாய். ஒழுங்காக இந்த ஒரு வருடத்தில் "கம்ப்யூட்டர் முடித்திருந்தால் இந்த ஊரிலேயே நல்ல சம்பளத்தில் வேலை கிடைத்திருக்கும்."

"எனக்கும் கம்ப்யூட்டருக்கும் ஒத்து வர மாட்டேங்கிறது சில்வியா"

"சே! இப்படி ஒரு மக்கைப் போய் காதலித்தேன் பார்" என்று தலையில் அடித்துக்கொண்ட போது "சில்வியா எங்கே?" என்ற குரல் கேட்க, சரி சரி எப்படியாவது போய் ஒரு பூங்கொத்தும், சீக்கிரம் குணமடைய ஒரு வாழ்த்து அட்டையும் வாங்கிவிட்டு வந்துவிடு' என்று ஓடினாள் சில்வியா.

குமணராசன் "எங்கே போய் விட்டாய் சில்வியா? உன் அம்மாவை கொஞ்சம் தேற்று! நான் மாமாவை விமானத் தளத்திற்கு கொண்டு செல்வதற்கு ஏற்பாடு செய்கிறேன்" என்றார்.

"சரி அத்தான்"

"அங்கே யாரோடு பேசிக்கொண்டிருந்தாய்... அந்தப் பையன் சகாயராஜ் மாதிரி...."...என்று இழுத்தார்.

"இல்லை அத்தான் அப்பாவின் நண்பர் மகன் ஒருவர் அப்பாவை பார்க்க வந்திருந்தார் அவர் தான் என்னோடு பேசிக்கொண்டிருந்தார்"

"இனி அந்தப் பிச்சைக்காரப் பயல் சகாயராஜோடு தொடர்பு எதுவும் வைத்துக்கொள்ளாதே. அது உனக்கும் நல்லதல்ல. நம் குடும்பத்திற்கும் நல்லதல்ல"

சில்வியா ஒன்றும் சொல்லாமல் தலை குனிந்து நின்றாள் "'சரி சரி போய் உன் அம்ம்மாவிற்கு ஆறுதல் சொல் அவர்கள் அழுது கொண்டீருக்கிறார்கள்" என்று சொல்லி விட்டு மற்ற வேலைகளை கவனிக்கச் சென்றார் குமணராசன்.

***

"குவைத்தில் போய் ஹனிமூனா?" நம்மூரிலே எத்தனை பிக்னிக் ஸ்பாட் டூரிசம் சென்டர் இருக்கிறது அதையெல்லாம் விட்டு விட்டு அந்தப் பாலை வனக்காட்டிலே அடிக்கிற வெயில்லே போய் யாரவது ஹனிமூன் வெச்சுக்குவாங்களா?" சுவேதா தன் கணவனிடம் நூறாவது முறையாக சொல்லிக்கொண்டிருந்தாள்.

திரு இரஜகைநிலவன்

"வேற வழியில்லை சுவேதா ஊட்டி, கொடைக்கானல் பெங்களூர் போகலாம்தான். கம்பெனியிலே விடுமுறை தர மாட்டார்கள். ஏற்கனவே திருமண விடுமுறை எடுத்து வந்து உன்னைப் பெண் பார்த்து உடனடியாக கல்யாண ஏற்பாடெல்லாம் செய்து முடிப்பதற்குள்ளே ஒரு மாதம் முடிந்து போய்விட்டது.

இனி விடுமுறையை நீடித்தால் உன் ஊரிலேயே இருந்துகொள் நாங்கள் வேறு ஆள் பார்த்துக் கொள்கிறோம் என்று அனுப்பி விடுவார்கள். அப்புறம் சோறு கஞ்சிக்கு லாட்டரி அடிக்க வேண்டியதுதான்."

"அது சரி வேலைக்கு உடனடியாக திரும்பிச் செல்ல வேண்டும் என்று சொல்லுங்கள் இதில்லே ஹனிமூனுக்கு ஏன் குவைத்துக்குப்போக வேண்டும் என்று சொல்கிறீர்கள்." சிரித்தாள் சுவேதா.



...தொடரும்

திரு இரஜகைநிலவன்

# மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை

கட்டுரை

31.08.1896 - 04.02.1985

செந்தமிழ்க் களஞ்சியம், இலக்கணத் தாத்தா



பிறப்பு : சென்னை, சைதாப் பேட்டை மேட்டுப்பாளையத்தில் 31.08.1896

படிப்பு : தமிழிலும், ஆங்கிலத்திலும் நல்ல புலமை பெற்றவர்

பதிப்பித்த நூல்கள்: இறையனார் அகப்பொருள்,தொல்.சொல் (நச்சர் உரை), தஞ்சைவாணன் கோவை,வீரசோழியம், நளவெண்பா அஷ்டபிரபந்தம், யாப்பருங்கலம் காரிகை, யசோதர காவியம் முதலிய நூல்களை பதிப்பித்தார்.

யாப்பருங்கலக்காரிகை :

இலக்கண உலகில் இவர் பதிப்பித்த யாப்பருங்கலக்காரிகை இன்றும் அறிஞர்களால் போற்றப்படுகிறது. இதற்கு இணையான ஒரு பதிப்பு இன்றுவரை இல்லை என்றே கூறலாம். உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் இந்நூலை மீள்பதிப்பு செய்துள்ளது. இவர் பதிப்பாளராக மட்டுமன்றி படைப்பாளராகவும் இருந்துள்ளார்.

பிற படைப்புகள் :

பத்திராயு(அ) ஆட்சிக்குரியோர்,திருக்கண்ணபிரானார் அற்புதவிளக்கு ,குணசாகரர் (அ) இன்சொல் இயல்பு, அரிச்சந்திர புராணச் சுருக்கம், அராபிக்கதைகள் முதலியன இவரது படைப்புகளில் குறிப்பிடத்தக்கவை. இவை தவிர, அம்பலவாணன்,இளங்கோவன் என்னும் இரு புதினங்களையும் படைத்துள்ளார்.

திரு அ வில்சன் இதழாசிரியர்


# மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை

கட்டுரை

**31.08.1896 - 04.02.1985**

**செந்தமிழ்க் களஞ்சியம், இலக்கணத் தாத்தா**

**சிந்தாமணிச்செல்வர்:**




மொழி செப்பமாக இல்லாவிட்டால் கருதிய எச்செயலும் கருதியபடி நடவாது என்பதை உணர்ந்த மே.வீ.வே. மொழியில் பிழை நேராதபடி எ ச் ச ரி க் கை யு ட ன் செயல்பட்டுள்ளார்.காஞ்சிபுரத்தில் "கச்சித் தமிழ்க் கழகம்" என்னும் ஓர் அமைப்பை நிறுவி பலருக்கும் தமிழ் உணர்வை ஊட்டினார்.அத்துடன் சீவகசிந்தாமணி குறித்து நெடியதோர் சொற்பொழிவாற்றினார். அதனால்தான் திரு.வி.க. "சிந்தாமணிச்செல்வர்" என்னும் பட்டமளித்து இவரைப் பாராட்டினார்.

**விருதுகள் :**

செந்தமிழ்க்களஞ்சியம் , கன்னித் தமிழ்க்களஞ்சியம், கலைமாமணி ஆகிய விருதுகளையும் இவர் பெற்றுள்ளார். நியூயார்க் உலகப் பல்கலைக்கழகம் மே.வீ.வே.க்கு டாக்டர் பட்டம் வழங்கி கௌரவித்தது.

கவியரசு கண்ணதாசன் உள்ளிட்ட பலரும் எழுதிய "பாவலர் போற்றும் மகாவித்துவான் மே.வீ.வே." என்னும் தொகுப்பு நூல் இவரது புகழை இன்றளவும் பேசிக்கொண்டிருக்கிறது.

**மறைவு :**

தமிழ் இலக்கிய உலகில் 89 ஆண்டுகள் வரை உலவிய மே.வீ.வே. 4.2.1985 இறைவனடி சேர்ந்தார்.

திரு அ வில்சன் இதழாசிரியர்

## நாளை நமதே

அடுத்தவரோடு ஒப்பிட்டு
உனை நீ
தாழ்த்திக் கொள்ளாதே
உலகத்தில் சிறந்தது
உனக்கு நீயே.

அகர முதல இலக்கிய பேரவை
Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

அகமும் தமிழே முதலும் தமிழே

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலெலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில,

அகர முதல செய்திக்குழு அகர முதல இலக்கியப் பேரவை
அகர முதல கல்விக்குழு சிவம் அறக்கட்டளை

தொடர்பிற்கு :

9597887847
8870884969



# அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com